# புதுச்சேரியில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள் - கருத்தரங்கம்!

புதுச்சேரி, மே 5 - புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்தநாள் விழா படத் திறப்பு, மலர் வணக்கம், கருத்தரங்கம் என பகுத்தறிவாளர் கழகத்தின் சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

மே தினத்தை முன்னிட்டு புதுச்சேரி பெரியார் படிப்பகத்தில் திராவிடர் கழகக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

தொடர்ந்து 'புதியதோர் உலகு செய்வோம்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது.

பகுத்தறிவாளர் கழக மாநில அமைப்பாளர் கு. இரஞ்சித்குமார் தலைமையில் புதுச்சேரி பகுத்தறிவாளர் கழகச் செயலாளர் பா.குமரன் வரவேற்புரை ஆற்றினார்.

தொடர்ந்து புதுச்சேரி தன்னுரிமை கழகத் தலைவர் தூ.சடகோபன், கொம்யூன் கழகப் பொறுப்பாளர் இராம.சேகர், அரசு ஊழியர் அய்க்கியப் பேரவைத் துணைப் பொதுச் செயலாளர் மணித். கோவிந்தராஜ், புதுவை இளைஞர் அமைதி மையத்தின் தலைவர் செ.ஆதவன், புதுச்சேரி பகுத்தறிவாளர் கழகத் தலைவர் நெ.நடராசன், திராவிடர் கழக மாவட்டத் தலைவர் வே.அன்பரசன் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் படத்தை பகுத்தறிவு எழுத்தாளர் மன்றத் துணைச் செயலாளர் வி.இளவரசி சங்கர் திறந்து வைத்து உரையாற்றினார்.

அண்மையில் மறைந்த திராவிடர் இயக்கப் பாடகர் தேனிசை செல்லப்பா அவர்களின் படத்தை திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் முனைவர். துரை. சந்திரசேகரன் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து நாற்பதாண்டு களுக்கும் மேலாக இலக்கியப் பணி ஆற்றி வரும் திருக்குறள் சண்முகம் அவர்களுக்கு சால்வை அணிவித்து பெரியார் சிலையை நினைவுப் பரிசாக வழங்கினார்.

விடுதலை வாசகர் வட்டத் தலைவர் கே.மு. தமிழ்ச்செல்வன் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

## மாணவர்கள் அதிர்ச்சி

# 'நீட்' அனுமதிச் சீட்டுகளில் குளறுபடி - தவறுகள்!

சென்னை, மே 5 - தேசிய அளவில் இளநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நீட் (NEET) நுழைவுத் தேர்வு மே 3ஆம் தேதி நடைபெற்றது. இதற்கான முன்னேற்பாடுகளில் தேசியத் தேர்வு முகமை தீவிரமாக ஈடுபட்டு வரும் நிலையில், தற்போது வெளியிடப்பட்டுள்ள தற்காலிக அனுமதிச் சீட்டுகளில் (Admit Card) இடம்பெற்றுள்ள வினோதமான மொழிபெயர்ப்புத் தவறுகள் தமிழ்நாடு மாணவர்களிடையே பெரும் குழப்பத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளன.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் பலர் இந்தத் தேர்வைத் தமிழ் மொழியில் எழுத விண்ணப்பித்திருந்தனர். பொதுவாக ஆங்கிலம், தமிழ், ஹிந்தி உள்ளிட்ட 13 முக்கிய மொழிகளில் நீட் தேர்வு நடத்தப்படுகிறது. ஆனால், இணையதளத்தில் இருந்து அனுமதிச் சீட்டைப் பதிவிறக்கம் செய்த சில மாணவர்களுக்குப் பேரதிர்ச்சி காத்திருந்தது. வினாத்தாள் மொழி என்ற இடத்தில் 'தமிழ்' என்பதற்குப் பதிலாக 'நாகர்' என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

நீட் தேர்வு நடத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட 13 மொழி களின் பட்டியலில் 'நாகர்' என்ற ஒரு மொழியே இல்லாத போது, இத்தகைய பிழை எவ்வாறு நேர்ந்தது என்பது மாணவர்களையும் பெற்றோர்களையும் திகைக்க வைத்துள்ளது. தமிழை தேர்வு செய்த பலருக்கு நாகர் என்று இருந்துள்ளது.

மொழிப் பிரச்சினை மட்டு மன்றி, அனுமதிச் சீட்டில் உள்ள மற்ற விவரங்களும் பார்ப்பவர்களைச் அதிர்ச்சி அடைய வைக்கும் அளவிற்கு இருந்தது.

தேர்வர் பெயர்: மாணவரின் பெயர் இடம்பெற வேண்டிய 'Candidate Name' என்ற பகுதி, 'வேட்பாளர் பெயர்' என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தேர்தல் போல வேட்பாளர் என்ற பெயர் பயன்படுத்தப்பட்டு உள்ளது. Candidate என்பதை மாணவர் என்று மொழி பெயர்க்காமல் வேட்பாளர் என்று மொழி பெயர்த்தது கடும் விமர்சனங்களை சந்தித்து வருகிறது.

ஆண் அல்லது பெண் (Gender) என்று குறிப்பிடப்பட வேண்டிய இடத்தில், 'திருமணம்' என்று அச்சிடப்பட்டுள்ளது. இது எந்த அடிப்படையில் மொழிபெயர்க்கப் பட்டது என்பது புரியாத புதிராக உள்ளது.

தேர்வு விவரங்கள்: 'Test Details' என்ற பகுதி, 'சோதனை விவரங்கள்' என்று நேரடியாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. நேரடியாக google translateல் தமிழ் மொழியே தெரியாத ஒருவர் மொழி பெயர்த்தது போல இது உள்ளது.

இந்தக் குளறுபடிகளுக்குப் பின்னால் உள்ள காரணத்தை ஆராய்ந்த போது, இது முழுக்க முழுக்கத் தானியங்கி மொழிபெயர்ப்பு மென்பொருட்களால் (Google Translate போன்ற கருவிகள்) நேர்ந்த பிழை என்பது தெரியவந்துள்ளது.

ஆங்கிலத்தில் பதிவிறக்கம் செய்யும் போது அனைத்துத் தகவல்களும் சரியாகவே உள்ளன. இருப்பினும், தமிழ் மொழியில் தகவல்களைப் பார்க்க விரும்பும் கிராமப்புற மாணவர்கள் மற்றும் பெற்றோருக்கு இது தேவையற்ற மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

## கோடை காலங்களில்

# கால்நடைகளை பாதுகாப்பாக பராமரிப்பது எப்படி?

## கால்நடை பராமரிப்புத்துறை விளக்கம்!

சென்னை, மே 5 - கோடைகாலங்களில் கால்நடைகளை பாதுகாப்பாக பராமரிப்பது எப்படி? என்பது குறித்து கால்நடை பராமரிப்புத் துறை வழிமுறைகளை வெளியிட்டுள்ளது. கால்நடைகளை பராமரிப்பது எப்படி? இதுதொடர்பாக கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

தமிழ்நாட்டின் கிராமப்புற பொருளாதார வளர்ச்சியில் கால்நடை வளர்ப்பு முக்கிய பங்காற்றி வருகிறது. பால், இறைச்சி, முட்டை உள்ளிட்ட உணவுப் பொருட்களின் உற்பத்தியை உயர்த்துவதோடு, விவசாயிகளின் கூடுதல் வருமானத்துக்கும் கால்நடை வளர்ப்பு உறுதுணையாக உள்ளது. குறிப்பாக கோடைகாலங்களில் அதிகரிக்கும் வெப்ப நிலை காரணமாக கால்நடைகள் வெப்ப அயர்ச்சிக்கு ஆளாகி அவற்றின் உடல்நலம் மற்றும் உற்பத்தி திறன் பாதிக்கப்படுகின்றன. இதனால் பால் உற்பத்தி குறைதல், வளர்ச்சி பாதிப்பு, இனப்பெருக்க திறன் குறைதல் மற்றும் சில நேரங்களில் உயிரிழப் புகளும் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே கோடைகாலங்களில் கால்நடைகளை பராமரிப்பது எப்படி? என்பது குறித்த வழிமுறைகள் வருமாறு: -

### குடிநீர் கொடுக்கவேண்டும்!

★ கால்நடைகளுக்கு ஒரு நாளைக்கு 4 அல்லது 5 முறையாவது குடிப்பதற்கு உகந்த குடிநீர் கொடுக்கவேண்டும். கறவை மாடுகளுக்கு எப்போதும் தண்ணீர் கிடைக்கும் வகையில் தண்ணீர் தொட்டியை அமைக்கவேண்டும்.

★ நீர்தெளிப்பான் அமைப்பது, குளிர்ந்த நீரினை கால்நடைகளின் மேல் தெளிப்பது, மின்விசிறி அமைப்பது ஆகியவை மூலம் கோடை வெப்பத்தினால் ஏற்படும் அயர்ச்சியினை தவிர்க்கலாம். மேலும் 1 மாட்டுக்கொட்டகையின் கூரைக்கு மேலேயும் நீர் தெளிப்பான் அமைக்கலாம். இதனால் பால் உற்பத்தி அதிகரிக்கும்.

★ அடைக்கப்பட்ட அல்லது நெருக்கமான இடத்தில் கால்நடைகளை கட்டவேண்டாம். கால்நடை தீவனங்களை வெட்டவெளியில் போடவேண்டாம்.

### உச்சிவெயிலில் தீவனம் கூடாது!

★ ஆடுகளை காலை 6 மணி முதல் 11 மணி வரையிலும், பிற்பகல் 3 மணி முதல் இரவு 7 மணி வரையிலும் மேய்ச்சலுக்கு அனுப்பவேண்டும்.

ஆடுகளுக்கு அம்மை, தொண்டை அடைப்பான் நோய், கோமாரி நோய், ஆட்டுக்கொல்லி நோய் முதலியவற்றிற்கு தடுப்பூசிபோட வேண்டும்.

★ கோழிகளுக்கு உச்சி வெயில் நேரத்தில் தீவனம் வைக்காமல், இரவு, விடியற்காலையில் தீவனம் அளிக்க வேண்டும்.

★ பறவைகளுக்கு போதுமான நிழற்கூரைகள் அமைத்து கொடுத்து போதுமான நீர்க் கொடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு வழிமுறைகள் வெளியிடப்பட்டுள்ளது.

## ஏழை, எளிய, நடுத்தர மக்களை பாதிக்கும்

# வணிக சமையல் எரிவாயு விலை உயர்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

## மே 7ல் தமிழ்நாடு முழுவதும் நடைபெறுகிறது!

சென்னை, மே 5 - ஏழை, எளிய, நடுத்தர மக்களை பாதிக்கும் வணிக சமையல் எரிவாயு விலை உயர்வைக் கைவிடவும், இளைஞர்களின் வாழ்க்கையை சீரழிக்கும் ரயில்வேயின் பணியிடக் குறைப்பை கைவிடவும் வலி யுறுத்தி மே 7, 2026 அன்று சி.பி.ஐ.(எம்), சி.பி.ஐ., வி.சி.க., சி.பி.ஐ. (எம்.எல்) லிபரேசன் சார்பில் தமிழகம் முழுவதும் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இதுதொடர்பாக சி.பி.எம். மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், சி.பி.ஐ. மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், வி.சி.க. நிறுவனர் தொல். திருமாவளவன், சி.பி.ஐ. (எம்.எல்) லிபரேசன் மாநிலச் செயலாளர் பழ. ஆசைத்தம்பி ஆகியோர் மே 3 ஞாயிறன்று கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

### வணிக சிலிண்டர் விலை உயர்வு!

ஒன்றிய அரசு வணிக சிலிண்டர் விலையை வரலாறு காணாத அளவிற்கு உயர்த்தி யுள்ளது. கடந்த 120 நாட்களில் 1,518 ரூபாய் உயர்த்தியுள்ளது. இந்த ஆண்டு ஜனவரி 1 ஆம் தேதி யன்று 1,739 ரூபாயாக இருந்த ஒரு சிலிண்டரின் விலை தற்போது 3,257 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

ஏறத்தாழ இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. இதே போன்று புலம்பெயர் தொழிலாளர்களும், தெருவோர வியாபாரிகளும், சிறு குடும்பங்களும் கடுமையாக பாதிக்கப்படும் வகையில் அவர்கள் பயன்படுத்தும் 5 கிலோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலையை ரூ. 261 உயர்த்தியுள்ளார்கள்.

### அப்பட்டமான கொள்ளை!

இதற்கு சர்வதேச சந்தையில் எல்.பி.ஜி. விலை உயர்வு காரணமாக சொல்லப்படுகிறது. ஆனால், ஒன்றிய பாஜக அரசாங்கம் கடந்த நான்காண்டுகளாக சர்வ தேச சந்தையில் கச்சா எண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு விலைகள் மூன்றில் ஒரு பகுதி குறைந்த போதும் அதன் பலனை சாதாரண மக்களுக்கு வழங்க முன்வர வில்லை. கடந்த நான்காண்டுகளாக பெட்ரோல் டீசல், சமையல் எரிவாயு விலைகளை ஒரு போதும் குறைக்கவில்லை. இந்நிலையில் தற்போது வணிக சமையல் எரிவாயு விலையை உயர்த்தியிருப்பது அப்பட்டமான கொள்ளையாகும்.

### ரயில்வே பணிகள் குறைப்பு!

மேலும், 2026 ஏப்ரல் 24ஆம் தேதியன்று வெளியிடப்பட்டுள்ள ரயில்வே துறையின் சுற்றறிக்கையின் படி ரயில்வேயில் மொத்த முள்ள பணியிடங்களில் ஆண்டுக்கு 2 சதவிகிதத்தை குறைக்க வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

கடந்த ஆண்டு 28 ஆயிரம் பணியிடங்களுக்கு மேல் இப்படி குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 29 ஆயிரத்திற்கும் அதிக மான பணியிடங்களை குறைப்பதற்கு இந்த சுற்றறிக்கை வலியுறுத்துகிறது. தமிழ்நாடு உள்ளிட்ட தென்னக ரயில்வேயில் 1906 பணியிடங்களை இந்த ஆண்டில் குறைக்க வேண்டும் என்று வழிகாட்டப்பட்டுள்ளது.

### 10 லட்சம் காலிப்பணியிடங்கள்!

ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை என்கிற முழக்கத்தோடு மக்களை ஏமாற்றி ஆட்சிப் பொறுப்புக்கு வந்த மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசாங்கம், இந்தியாவில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக வேலை வழங்கிக் கொண்டிருக்கும் ரயில்வேயில் அனுமதிக்கப்பட்ட 14 லட்சம் பணியிடங்களில் மூன்று லட்சத்திற்கும் அதிகமான பணியிடங்களை நிரப்பாமல் வைத்துள்ளதோடு மேலும் அதை குறைப்பதற்கு திட்டமிடுகிறது.

ஒன்றிய அரசுப் பணிகளில் 10 லட்சம் பணியிடங்களை காலியாக வைத்துள்ளது. மத்திய பொதுத்துறை நிறுவனங்களில் நரேந்திர மோடி ஆட்சிப் பொறுப்புக்கு வந்த போது இருந்த 13 லட்சம் நிரந்தர பணியிடங்களில் தற்போது 9 லட்சம் பேர் மட்டுமே உள்ளனர்.

எனவே, அநியாயமான, நியாயமற்ற வணிக எரிவாயு சிலிண்டர் விலை உயர்வை உடனடியாக திரும்பப் பெற வேண்டுமெனவும், ரயில்வேயில் உத்தேசிக்கப்பட்டுள்ள 29 ஆயிரத்திற்கும் அதிகமான பணியிட வெட்டுக்களை கைவிட வேண்டுமெனவும் வலியுறுத்தி மே 7 அன்று தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் நாசகரமான இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக அனைத்துப் பகுதி மக்களும் ஒன்றிணைந்து குரலெழுப்ப வேண்டுமெனவும், இந்த கண்டன இயக்கத்திற்கு ஆதரவளிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஏ.ஐ. தொழில்நுட்ப குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுமா?

## ஒன்றிய அரசு விளக்கம்!

மும்பை, மே 5 - ஏ.ஐ. மற்றும் கிளவுட் தொழில்நுட்ப வளர்ச்சியால் இந்தியாவில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுமா? என்ற சந்தேகத்துக்கு மத்திய அரசுவிளக்கம் அளித்துள்ளது.

நீர் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இந்தியாவில் அதிவேகமாக வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவு(ஏ.ஐ.) மற்றும் கிளவுட் கம்ப்யூட்டிங் துறைகளால் ஆண்டுக்கு சுமார் 3 ஆயிரத்து 750 கோடி லிட்டர் தண்ணீர் செலவிடப்பட வாய்ப்புள்ளதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது குறித்து 'நாட்கனெக்ட்' அறக் கட்டளையின் இயக்குனர் பி.என். குமார், கடந்த மாதம் பிரதமர் அலுவலகத்திற்கு ஒரு கடிதம் எழுதினார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது: -

மத்திய பொது சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் அமைப்பின் கணக்கீட்டின்படி, ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 135 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. அந்த அடிப்படையில் பார்த்தால், ஏ.ஐ. மற்றும் டேட்டா சென்டர்களுக்கு தேவைப்படும் தண்ணீர், சுமார் 7 முதல் 8 லட்சம் மக்களின் ஓராண்டு தேவைக்கு சமமானது. அல்லது மும்பை போன்ற ஒரு பெருநகரத்திற்கு ஒரு வாரத்திற்குத் தேவையான தண்ணீரை இந்த தொழில் நிறுவனங்கள் மட்டும் பயன்படுத்தக்கூடும். இது இந்தியாவின் நீர் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும்.

இவ்வாறு அந்த கடிதத்தில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

ஒன்றிய அரசு பதில் இந்த கடிதத்திற்கு பதில் அளித்து மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தின் துணைச் செயலாளர் ஷம்பு நாத் குப்தா கூறியிருப்பதாவது:-

இந்தியாவின் டேட்டா சென்டர் திறன் கடந்த 2020ம் ஆண்டில் 375 மெகாவாட் டாக இருந்தது.இது தற்போது 2025ம் ஆண்டு 1,500 மெகா வாட்டிற்கும் மேலாக அதிகரித்துள்ளது. இந்த தொழில் வளர்ச்சியை போலவே, தண்ணீரை சேமிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது டேட்டா சென்டர்களில் குளிர்விப்பு பணிகளுக்காக நேரடியாக சிப் மூலம் குளிர்விக்கும் முறை மற்றும் இம்மர்ஷன் சிஸ்டம்ஸ் போன்ற நவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை தண்ணீர் மற்றும் மின்சார தேவையை குறைக்கின்றன.

மேலும், மழைநீர் சேகரிப்பு, கழிவுநீர் மறுசுழற்சி மற்றும் டிஜிட்டல் முறையில் நிலத்தடி நீரை தொடர்ந்து கண்காணித்தல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் மூலம் நீர் ஆதாரங்களை பாதுகாக்க அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

இவ்வாறு ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது.

## 34 ஆண்டுகளாக இயங்கி வந்த

# ஸ்பிரிட் ஏர்லைன்ஸ் நிறுவன செயல்பாடுகள் நிறுத்தம்!

வெஸ்ட் பாம் பீச், மே 5 - அமெரிக்காவில் மிக குறைந்த கட்டணச் சலுகைகள் மூலம் கடந்த 34 ஆண்டுகளாக சேவை யாற்றி வந்த ஸ்பிரிட் ஏர்லைன்ஸ் நிறுவனமானது மஞ்சள் நிற விமானங்களை கொண்டு தினமும் நூற்றுக்கணக்கான விமான சேவைகளை இயக்கியது. சுமார் 17ஆயிரம் பேருக்கு நிறுவனம் வேலைவாய்ப்பு வழங்கியது. இந்நிலையில் ஈரான் போரின் காரணமாக விமான எரிபொருள் விலைகள் கடுமையாக உயர்ந்ததால் இரண்டு ஆண்டுகளுக்குள் இரண்டாவது முறையாக இந்த நிறுவனம் திவால் நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேர்ந்தது.

இந்த நிறுவனத்தை அரசு ஏற்று நடத்தும் திட்டம் குறித்த ஒரு இறுதி முன்மொழிவை அரசு நிறுவனத்திடம் அளித்திருந்ததாகவும் ஆனால் அது தொடர்பான ஒப்பந்தம் எட்டப்படவில்லை என்றும் அதிபர் டிரம்ப் கடந்த வாரம் அறிவித்து இருந்தார். இந்நிலையில் இந்த நிறுவனம் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், கடந்த 34 ஆண்டுகளாக இந்த துறையில் எங்களது மிக குறைந்த கட்டண சேவை மாதிரி ஏற்படுத்திய தாக்கத்தை குறித்து நாங்கள் பெருமை கொள்கிறோம்.

வாடிக்கையாளர்கள் தாங்கள் செலுத்திய பணத்தை திரும்ப பெறுவதற்கு எதிர்பார்க்கலாம். ஆனால் வேறு விமான நிறுவனங்களில் பயண முன்பதிவு செய்வதற்கு நிறுவனத்தால் எந்த உதவியும் செய்ய இயலாது. எங்களது செயல்பாடுகளை முறையாக முடித்துக்கொள்ளும் நடவடிக்கைகளை உடனடியாக அமலுக்கு வரும் வகையில் தொடங்கியிருக்கிறோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அனைத்து விமானச் சேவைகளும் ரத்து செய்யப்பட்டுவிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பா.ஜ.க. முன்னாள் எம்.பி. பிரிஜ் பூஷனால் அச்சுறுத்தல்!

## ஒலிம்பிக் மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் வீடியோ வெளியீடு!

புதுடெல்லி, மே 5 - பா.ஜ.க. முன்னாள் எம்.பி., பிரிஜ் பூஷனால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக ஒலிம்பிக் மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் வீடியோ வெளியிட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2024ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற வினேஷ் போகத் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் முன்னாள் மல்யுத்த கூட்டமைப்பு தலைவராக இருந்த பாஜக எம்.பி பிரிஷ் பூஷனுக்கு எதிராக பாலியல் புகார் அளித்துள்ள 6 விளையாட்டு வீரர்களில், தானும் ஒருவர் என்பதை முதல் முறையாக வெளிப்படையாக அம்பலப்படுத்தி உள்ளார். அந்த பாலியல் வழக்கின் விசாரணை தற்போதும் டெல்லி நீதிமன்றத்தில் நடந்து வருகிறது.

இதனிடையே, இந்த மாதம் 10 முதல் 12ம் தேதி வரை, ஜப்பான் ஆசியப் போட்டிக்கான தகுதி தேர்வு உத்தரபிரதேசத்தில் நடைபெறுகிறது.

போட்டி நடைபெறும் இடம் பிரிஜ் பூஷன் ஆதிக்கம் செலுத்தும் இடம் என்றும், மல்யுத்த கூட்டமைப்பை தாம்தான் நடத்துவதாக பிரிஜ்பூஷன் தற்போதும் கூறி வருகிறார்.

இதனால், தனக்கும் தனது அணிக்கும் ஏதேனும் பிரச்னைகள் ஏற்படலாம். அப்படி நடந்தால் அதற்கு ஒன்றிய அரசு தான் பொறுப்பு என்றும் வினேஷ் போகத் குறிப்பிட்டுள்ளார்.

# எரிவாயு சிலிண்டர் விலை உயர்வு பற்றி கேட்டதும் உளறிய ஒன்றிய அமைச்சர்!

பெங்களூரு, மே 5 - கர்நாடக மாநிலம் ஹுப்பள்ளியில் ஒன்றிய அமைச்சர் ஷோபா கரந்த்லாஜே செய்தியாளர் சந்திப்பு மேற்கொண்டார்.

அப்போது பத்திரிகையாளர் ஒருவர்,

"தேர்தல் முடிந்த உடனேயே எரிவாயு சிலிண்டர் விலை உயர்ந்துவிட்டதே. இதற்கு என்ன சொல்ல போகிறீர்கள்?" என கேள்வி எழுப்பினார்.

இந்த கேள்வியால் அவர் அதிர்ச்சி அடைந்து, சில வினாடிகள் பேசாமல் நின்றார். ஆனாலும் பத்திரிகையாளரின் கேள்விக்கு பதில் அளிக்காமல் அமைச்சர் ஷோபா,

"மகளிருக்கு 33% ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும்.

இது 30 ஆண்டு களாக நிலுவையில் உள்ளது. ஒவ்வொரு கட்சியும் மகளிருக்கு நீதி வழங்குவது குறித்து மீண்டும் மீண்டும் பேசி வருகின்றன.

ஆனால் உண்மையில் மகளிருக்கு நீதி மறுக்கப்பட்டு வருகிறது" என கேள்விக்கு சம்மந்தம் இல்லாமல் பேசி, அந்த இடத்தை விட்டு ஓட்டம் பிடித்தார்.